[සියලු හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
[All Rights Reserved]

# ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
# ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
# Uva Provincial Department of Education

MODEL EXAMINATION PAPER FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION AND THE AWARD OF BURSARIES
மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2024 செப்டம்பர்

5

## வினாத்தாள் 1

நேரம் 1 மணித்தியாலயம்

2024 ஆகஸ்ட் 23
மு.ப 11.15 - பி.ப 12.15

சுட்டெண் : ............................

**பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40 வினாக்கள்** உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மட்டும்**


| பக்கம் | புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| **மொத்தம்** | |
| **இறுதிப் புள்ளிகள்** | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என ஊறுதிப்படுத்துகிறேன் | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன் | V/I/T |
| **மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | V/I/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிகள் சரியாகும் | V/I/CH |

பக்கம் 2 ஐ பார்க்க

kalvi.lk

01) கீழே குடும்பம் ஒன்றின் தாய், தந்தை, மகன் மற்றும் மகள். ஆகியோரின் வரைபடம் ஒன்று தரப்பட்டுள்ளது. படம் தொடர்பாக கூறக் கூடிய சரியான கூற்று யாது?




(1) இவர்கள் அனைவரும் தங்கள் கைகளை உயர்த்தியுள்ளனர்.

(2) தாயும் மகனும் வலது கைகளையும் தந்தையும் மகளும் இடது கைகளையும் உயர்த்தியுள்ளனர்.

(3) தந்தை வலது கையும், மகன் இடது கையும் தாய் இடது கையும், மகள் வலது கையும் உயர்த்தியுள்ளனர்.

02. தரப்பட்டுள்ள காட்சிப்படத்தில்  மற்றும்  ஆகிய உருக்களைக் குறித்துக் காட்டுவதற்கு பொருத்தமான இடத்தினைக் குறிக்கும் எழுத்துக்கள் யாவை?




(1) **P** மற்றும் **R**

(2) **P** மற்றும் **Q**

(3) **Q** மற்றும் **P**


Education
கல்வி
අධ්‍යාපන


03. தரப்பட்டுள்ள வாக்கியத்தில் வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்களை தெரிவு செய்க.


சித்திரை மாதம் முழுவதும் அதிகாலையில் குயில்கள் ..................... கானம் செவிகளுக்கு ....................... காணப்பட்டது.

(1) கூவும், இரைச்சலாக (2) கூவும், இனிமையாக (3) கரையும், கடுமையாக


04. தரப்பட்ட வரிக்குதிரையில் வெற்றிடத்திற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க








(1)



(2)



(3)

- கீழுள்ள கவிதையை வாசித்து 5ஆம் வினாவிற்கு சரியான விடையை தெரிவு செய்க.

| |
|---|
| மேல் கல்லும் கீழ்க் கல்லும் இங்கே – தினம் ஒன்றாக உழைக்குது தம்பி!<br>மேல் கல் வட்டமாக சுழல இங்கே - கீழ்க் கல் உணவை விழுங்குது தம்பி! |

05. மேலுள்ள கவிதையை ஓர் விடுகதையாக வினாவும் போது கிடைக்கும் பதில்

(1) அம்மி (2) திருகைகல் (3) ஆட்டுக்கல்


06. கமலநாதன் என்ற முதலாளியிடம் ஒரு மேசனும் மற்றும் ஒரு உதவியாளரும் வேலை செய்கின்றனர். கமலநாதன் தன்னிடம் இருந்த பணத்தை மேசனுக்கு மட்டும் கூலியாக வழங்கினால் 20 நாட்களுக்கு வழங்க முடியும், அல்லது உதவியாளருக்கு மட்டும் கூலியாக வழங்கினால் 30 நாட்களுக்கு வழங்க முடியும். அதே பணத்தை இருவருக்கும் ஒன்றாக கூலியாக வழங்கினால் எத்தனை நாட்களுக்கு வழங்க முடியும்?

(1) 12 நாட்கள் (2) 15 நாட்கள் (3) 6 நாட்கள்

07. விளையாட்டுப் போட்டி ஒன்றினை பார்வையிடுவதற்கான உள்ளக மைதானம் ஒன்றில் உள்நுழைவதற்கு 12 நுழைவாயில்களும், அங்கிருந்து வெளியேறுவதற்கு 5 நுழைவாயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. எனின் ஒரு இரசிகர் எத்தனை வெவ்வேறான வழிகளைப் பயன்படுத்தி உள்நுழைந்து வெளியே செல்ல முடியும்?

(1) 17 (2) 60 (3) 48

08. தரப்பட்டுள்ள கயிற்றினை 3 புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டினால் கிடைக்கும் துண்டுகளின் மொத்த எண்ணிக்கை யாது?



(1) 16

(2) 14

(3) 13

09. ரிது என்ற பிள்ளை பிறக்கும் போது அவளின் தந்தைக்கு வயது 27 ஆகும். அவளை விட மூன்று வயது இளையவனான அவளின் சகோதரன் பிறந்த போது அவளுடைய தாய்க்கு 29 வயது ஆகும் எனின் ரிதுவின் பெற்றோர் இருவருக்கும் இடையிலான வயது வித்தியாசம் யாது?

(1) 3 ஆண்டுகள் (2) 2 ஆண்டுகள் (3) 1 வருடம்


10. மோட்டார் வாகனம் ஒன்று தனது மொத்த பயணத் தூரத்தில் முதல் பாதியை மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்திலும், மீதி தூரத்தினை மணிக்கு 45 கிலோமீற்றர் வேகத்திலும் பயணம் செய்தது. எனின் அவ்வாகனம் தனது பயணத் தூரமான 180 கிலோமீற்றரை நிறைவு செய்வதற்கு செலவாகும் காலம் எவ்வளவு?

(1) 5 மணித்தியாலம் (2) 2 மணித்தியாலம் (3) 6 மணித்தியாலம்


kalvi.lk

- **11ஆம் 12ஆம்** வினாக்களில் வெற்றிடங்களுக்கு பொருத்தமான விடைகளை தெரிக

11.





(1) 7

(2) 4

(3) 8

12.




(1) 156 (2) 651 (3) 516

13. வரிசை ஒன்றில் முன்னாலிருந்து சங்கரன் நான்காவது இடத்திலும், பின்னாலிருந்து சங்கரி ஏழாவது இடத்திலும் இருக்கின்றனர். அவர்கள் இருவரும் தங்களின் இடங்களை மாற்றிக் கொள்கின்றனர். தற்போது சங்கரன் முன்னாலிருந்து பதினைந்தாவது இடத்தில் இருக்கின்றார். எனின் இடங்களை மாற்றிய பின், தற்போது சங்கரி பின்னாலிருந்து எத்தனையாவது இடத்தில் இருப்பார்?

(1) 18 வது இடத்தில் (2) 21 வது இடத்தில் (3) 11 வது இடத்தில்

14. வருடம் ஒன்றில் மார்ச் மாதம் 15 ஆம் திகதியாகும் போது அவ்வருடத்தில் நீங்கள் 75 நாட்களைக் கடந்து விட்டால் அவ்வருடம் தொடர்பாக கூறக்கூடிய கூற்றாக அமைவது.

(1) அவ்வருடம் ஒரு நெட்டாண்டாக கருதப்படும்.

(2) அவ்வருடம் ஒரு சாதரண வருடமாக கருதப்படும்.

(3) அவ்வருடம் தொடர்பாக உறுதியான தீர்மானம் எடுக்க முடியாது.


15. விளையாட்டு மைதானம் ஒன்றில் வதனி, விதுர்ஷன், சக்தினி, மாலினி, வத்சலா, மற்றும் சஸ்னா ஆகிய ஆறு மாணவர்களும் சம இடைவெளியில், வட்ட வடிவமான முறையில் ஒருவரை ஒருவர் எதிர் கொண்டு நேருக்கு நேராக நிற்கிறார்கள். வதனியின் வடக்கே வத்சலாவும், வத்சலாவின் வலது புறத்தில் விதுர்ஷனும், வதனியின் இடது புறத்தில் சக்தினியும் உள்ளனர். சஸ்னா சக்தினியை எதிர்கொண்டால், மாலினி வத்சலாவின் வலது பக்கத்தில் இருந்து எத்தனையாவதாக இருப்பார்?

(1) இரண்டாவது (2) நான்காவது (3) மூன்றாவது

16. வியாபாரி ஒருவர் தனது கடையில் ஒரு ரூபாய்க்கு இனிப்பு ஒன்று வீதம் விற்பனை செய்கின்றார். தமது கடையில் பெறும் இனிப்புக்களின் மேலுறைகள் இரண்டை சேகரித்து வழங்கும் மாணவர்களுக்கு மேலும் இலவசமாக இனிப்பு ஒன்றினை வழங்குகின்றார். எனின் அனிஸ் என்ற மாணவனிடம் பத்து ரூபாய் இருந்தால் அம் மாணவனால் **ஆகக் கூடியது** எத்தனை இனிப்புக்களை கடைக்காரரிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்?

(1) 19 இனிப்புக்கள் (2) 17 இனிப்புக்கள் (3) 15 இனிப்புக்கள்

- உருவில் காட்டப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு **17 ஆம் 18 ஆம்** வினாக்களுக்கு பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்யுங்கள்.




★ = 3 பிராணிகளைக் குறிக்கின்றது

17. மூன்று வட்டங்களினாலும் குறித்துக் காட்டக் கூடிய பிராணியாக அமைவது எது?


(1) கழுகு (2) காகம் (3) நாய்

18. உருவிலுள்ள தரவுகளின் அடிப்படையில் தாவரம் அல்லது மாமிசம் என்பவற்றில் ஒன்றை மட்டும் உணவாக உட்கொள்ளக்கூடிய பறவை **அல்லாத** பிராணிகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 8 (2) 16 (3) 24

19. ஒருவர், பெண் ஒன்றின் புகைப்படம் ஒன்றினைக் காட்டி, இப்படத்தில் இருப்பவர் எனது மனைவியின் கனவரின் தாய் என்கிறார். எனின் அப்புகைப்படத்தில் இருப்பவர் அப்புகைப்படத்தைக் காட்டுபவருக்கு எத்தகைய உறவாக இருக்க முடியும்?

(1) மாமியார் (2) அம்மா (3) மனைவி

20. 

இவ்வுருவில் உருவாக்கக் கூடிய முக்கோணிகள் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 20 (3) 27

21. ஒரு குறிப்பிட்ட வருடமானது திங்கட்கிழமையில் ஆரம்பிக்கப்பட்டு செவ்வாய்க்கிழயையில் நிறைவடைகின்றது எனின் அவ்வருடம் எந்த வருடமாக **அமையப்பெறாது**?

(1) 2021 (2) 2024 (3) 1996

22. அப்பா என்னிடம் சம அளவிலான பேனாக்கள் மற்றும் பென்சில்களைக் கொண்டு வந்துக் கொடுத்தார். என் அண்ணனுக்கும் அதே போல இரண்டு வகைகளையும் சம அளவு கொண்டு வந்து கொடுத்தார். எனக்கு கிடைத்த தொகையில் பாதி அவனுக்கு கிடைத்தது. நாங்கள் இருவரும் பெற்ற பேனா மற்றும் பென்சில்களின் அளவு 36 என்றால், எனக்கு கிடைத்த பேனாக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 24 (3) 6


23) தாங்கி ஒன்றில் நீரினை முற்றாக நிரப்புவதற்கு A, B மற்றும் C குழாய்களை தனித்தனியாக திறக்கும் போது 8.00 மணித்தியாலம், 12.00 மணித்தியாலம், மற்றும் 24.00 மணித்தியாலம் தேவைப்படும், மூன்று குழாய்களும் ஒரே சமயத்தில் காலை 7.00 மணிக்கு திறக்கப்பட்டால், தொட்டி முழுமையாக நிரம்பி முடியும் நேரம் யாது?


(1) மு.ப 10.00 (2) மு.ப 11.00 (3) நண்பகல் 12.00




kalvi.lk

24) உருவில் காட்டப்பட்டது போல சதுரக் கடதாசி ஒன்றினை முறிகோடுகளின் வழியே அம்புக்குறி காட்டிய திசையில் மடித்து, நிறம் தீட்டிய பகுதியை வெட்டி நீக்கும் போது கிடைக்கப் பெறும் வடிவமானது






(1)




(2)



(3)

25) நாடு, மாகாணம், மாவட்டம் ஆகிய தரவுகளைக் காட்டும் வரிபடத்தில் **"நாடு"** என்பதைக் குறித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தியுள்ள ஆங்கில எழுத்தாக அமைவது




(1) A (2) B (3) C

26) என்னிடம் காணப்படும் புத்தகங்களில் 5 ஐத் தவிற ஏனையவை தமிழ் புத்தகங்களாகும். 6 ஐத் தவிற ஏனையவை கணித புத்தகங்களாகும். 7 ஐத் தவிற ஏனையவை ஆங்கில புத்தகங்களாகும். எனின் என்னிடம் உள்ள புத்தகங்கள் எத்தனை?

(1) 18 (2) 9 (3) 6

27) அனிஷ் என்ற மாணவன் தொடர்பாக தரப்பட்டுள்ள கூற்றினை வாசித்து அவன் தொடர்பாக கூறக்கூடிய மிகச் சரியான காரணத்தை தெரிவு செய்க.


- ஒரு நாள் அனிஷ் பாடசாலைக்கு செல்லும் வழியில் கீழே விழுந்து விட்டான்

(1) அனிஷ் ஒரு குறும்புக்கார பையன்.

(2) பாதனிகளின் அடிப்பகுதி சரிந்து காணப்பட்டிருக்கும்.

(3) அவன் உடல் சமநிலை பேணப்படவில்லை.

28) அன்னாசி, பப்பாசி, வட்டக்காய் ஆகியன தொடர்பாக தரப்பட்டுள்ள தொடர்பைக் கவனத்தில் கொண்டு அன்னாசியின் நிறையை கண்டறிந்து சரியான விடையை தெரிவு செய்யுங்கள்.




(1) 8 kg 500 g

(2) 500 g

(3) 4 kg 250 g

- தரப்பட்டுள்ள மூன்று கட்டங்களையும் நன்கு அவதானித்து 29 ஆம், 30 ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை தெரிக.

| P | Q | R |
|---|---|---|
| கிழங்கு | ரோசா | பூமி |
| புலி | நேர்மை | புலி |
| ரோசா | புலி | நீர் |
| மைனா | பலா | ரோசா |
| வாரம் | மைனா | நேர்மை |

29) **Q** கட்டத்திற்கு மாத்திரம் பொருந்தக் கூடிய சொல்லாக அமைவது

(1) நேர்மை (2) மைனா (3) பலா

30) கீழேயுள்ள தகவலின் படி மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.

(1) 'புலி' எனும் சொல் P, Q ஆகிய இரண்டு கட்டங்களிலும் காணப்படுகின்றது.

(2) குறிப்பிட்ட ஒரு சொல் மட்டும் மூன்று கட்டங்களிலும் காணப்படுகின்றது.

(3) 'நேர்மை' என்ற சொல் எல்லாக் கட்டங்களிலும் காணப்படுகின்றது.

31) சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலய மாணவன் சர்வின் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றால் கொழும்பிலுள்ள பிரபல்யமான பாடசாலையான ரோயல் கல்லூரிக்கு உள்வாங்கப்படுவான். அங்கே அவன் விளையாட்டுப் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தினால் கிரிக்கட் அணியில் இணைத்துக் கொள்ளப்படுவான். எனினும் அவன் அந்த அணிகளில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இதற்கான சரியான காரணத்தை வெளிப்படுத்தும் கூற்று யாது?

(1) இவ் விளையாட்டுக்களுக்கு வேறு பாடசாலை மாணவர்களை உள்வாங்குவதில்லை

(2) புலமைப்பரிசில் பரீட்சையில் அவன் பெற்ற புள்ளியானது அப்பாடசாலையை தெரிவு செய்வதற்கு அவனுக்கு போதுமானதாக அமையவில்லை

(3) வேறு விளையாட்டுக்களில் அவன் ஈடுபாடு கொண்டிருந்தமை

32) ஹரினியிடம் ரூபாய் 320.00 காணப்படுகின்றது. அவளிடம் ரூபாய் 10.00, ரூபாய் 5.00, ரூபாய் 1.00 ஆகிய நாணயக்குற்றிகள் சமமான எண்ணிக்கையில் காணப்படுமாயின் அதில் காணப்படும் ரூபாய் 10.00 நாணயக்குற்றிகளின் மொத்த பெறுமதி யாது?

(1) ரூபாய் 200.00 (2) ரூபாய் 300.00 (3) ரூபாய் 100.00

33) **6 5 8 9 → 5 → 5 0 0** எனின் **1 9 7 8 → 7 →** …………

(1) 700 (2) 900 (3) 70

34) நிக்ஷனின் கைக்கடிகாரத்தில் நேரம் முற்பகல் 11.00 மணியை சரியாக காட்டியது. இருப்பினும் அதன் பிறகு அக்கடிகாரமானது ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் ஒரு தடவை 15 நிமிடங்கள் குறைவாக நகர்ந்து மூன்று மணித்தியாலத்திற்கு முன்பே முற்றிலும் நின்றுவிட்டது. அது நின்ற போது காட்டப்பட்ட நேரம் பிற்பகல் 1.15 எனின் கடிகாரம் தற்போது காட்ட வேண்டிய சரியான நேரம் யாது?

(1) பிற்பகல் 2.00 (2) பிற்பகல் 5.00 (3) பிற்பகல் 3.15


35) சுமித்தின் பணத்தில் அரைப்பங்கு சவீனாவிடம் உள்ளது. சவீனாவிடம் உள்ள பணத்தில் அரைப்பங்கு பவிஷானிடம் உள்ளது முவரிடமும் உள்ள பணத்தொகையின் மொத்தம் மினோஷிடம் உள்ளது. மினோஷிடம் உள்ள பணத்தொகை ரூபாய் 1050 எனின் பவிஷானிடம் உள்ள பணத்தொகை யாது?

(1) ரூபாய் 350.00 (2) ரூபாய் 700.00 (3) ரூபாய் 150.00

36. பெட்டி ஒன்றில் காணப்பட்ட சிவப்பு நிற பொத்தான்களின் எண்ணிக்கை நீல நிற பொத்தான்களின் எண்ணிக்கையிலும் அதிகமாகும். அவை இரண்டினதும் மொத்த எண்ணிக்கை 16 ஆகும். அவை இரண்டினதும் பெருக்கம் 55 ஆகும். எனின் நீலம் மற்றும் சிவப்பு நிற பொத்தான்களின் எண்ணிக்கை முறையே.

(1) 11, 5 (2) 6, 10 (3) 5, 11

37) புள்ளிக்கோட்டின் வழியே குறுக்காக வெட்டி அம்புக்குறி காட்டப்பட்டுள்ள திசை வழியாக பக்கத்தோற்றத்தினை அவதானிக்கும் போது தென்படும் விதம்





38) வர்த்தக நிலையம் ஒன்றில் ஒருவர் தினமும் 10 மடிக்கணினிகளை மாத்திரம் ஒன்று ரூபாய் 20 000 வீதம் விற்பனை செய்து வருகின்றார். குறிப்பிட்ட விசேட தினங்களில் மடிக்கணினிகள் ஒவ்வொன்றையும் ஒரு தடவை ரூபாய் 1000 வீதம் குறைத்து விற்பனை செய்கின்ற போது சாதாரண நாட்களில் விற்பனை செய்யப்படும் மடிக்கணினிகளை விட ஒன்று மேலதிகமாக விற்பனை செய்யப்படுவதை அறிகின்றார். எனின் அவர் நாளொன்றில் **உச்ச இலாபத்தை** பெறுவதற்கு விசேட காலத்தில் மடிக்கணினி ஒன்றினை விற்பனை செய்ய வேண்டிய விலை எவ்வளவு?

(1) ரூபாய் 19 000 (2) ரூபாய் 16 000 (3) ரூபாய் 15 000

39) விமலனின் வீட்டிற்கு மேற்கே 100 கிலோமீற்றர் தொலைவில் கமலனின் வீடு, கமலனின் வீட்டிற்கு வடக்கே 40 கிலோமீற்றர் தொலைவில் அமலனின் வீடு, அமலின் வீட்டிற்கு 100 கிலோமீற்றர் கிழக்கே நகுலனின் வீடும் உள்ளது. ஒரு நாள் விமலன் தன் வீட்டிலிருந்து முறையே கமலன், அமலன், நகுலன் வீடுகளுக்கு மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றான். அவன் செல்லும் வழியில் ஒவ்வொரு வீடுகளிலும் 10 நிமிடம் செலவழித்துவிட்டு பின்னர் மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் எவ்விடத்திலும் நிறுத்தாமல் சென்ற பாதையில் தனது வீட்டிற்கு திரும்பினான். எனின் பயணத்திற்கு செலவான மொத்த நேரம் எவ்வளவு?

1) 11 மணி 30 நிமிடங்கள் 2) 12 மணி 30 நிமிடங்கள் 3) 13 மணி 30 நிமிடங்கள்

40)




பின்வரும் விளக்கப்படத்தில் **A,B,C,D,E,F,G,H** என வெவ்வேறு பாடங்களின் **8** புத்தகங்கள் காட்டப்பட்டுள்ளன. கணிதம் மற்றும் சுற்றாடல் புத்தகங்களில் மட்டுமே சிங்கள புத்தகம் உரசுப்படுகின்றது. எனின் **F** என்ற எழுத்தால் குறிப்பிடப்படும் புத்தகம்,

(1) ஆங்கிலம் 2) கணிதம் 3) சிங்களம்

[සියලු හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
[All Rights Reserved]

# උව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
# ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
# Uva Provincial Department of Education

MODEL EXAMINATION PAPER FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION AND THE AWARD OF BURSARIES
மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 2024

## வினாத்தாள் II

5

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

சுட்டெண் : ..........................

**பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோடடின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60 வினாக்கள்** உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
- விடைகள் எழுப்பட வேண்டி வினாவிற்கு சரியான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- சரியான விடையை தெரிவு செய்யும் வினாக்களில் **சரியான விடையின் கீழ்க் கோடிடுக**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மட்டும்**

| பக்க இலக்கம் | |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என ஊறுதிப்படுத்துகிறேன் | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன் | V/I/T |
| **மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | V/I/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிகள் சரியாகும் | V/I/CH |


kalvi.lk

**01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்கவும்.**

எமது பாடசாலையில் சுற்றாடலை பாதுகாப்போம் என்ற நோக்கத்துடன் ''சீமா'' என்ற கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அக்கழகத்தில் நானும் ஒரு அங்கத்தவராக செயற்படுகின்றேன். பாடசாலை சூழலை சுத்தப்படுத்தல், மரக்கன்றுகளை நடுதல் , குப்பைகளை முறையாக அகற்றுதல் போன்ற செயற்பாடுகள் தற்போது வரை செய்துள்ளோம். நான் மரக்கன்றுகளுக்கு தினமும் நீர் ஊற்றுவதற்கு அதிகாலையிலேயே பாடசாலைக்கு வந்துவிடுவேன். அதனை பார்த்த நண்பர்களும் என்னுடன் சேர்ந்து மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றுவார்கள். குப்பைகளை முறையாக அகற்றுவதற்காக பச்சை, சிவப்பு, நீலம் என குப்பைத் தொட்டிகளில் நிறம் குறிக்கப்பட்டுள்ளது. எமது கழக செயற்பாடுகள் மூலம் பாடசாலை தற்போது அழகாக காட்சியளிக்கின்றது.

- கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை பந்தியில் இருந்து தெரிவு செய்து **புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. சுற்றாடலை பாதுகாக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கழகம் யாது?

 ..............................................................................................................

2. அக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இரண்டு எழுதுக.

 ..............................................................................................................

3. **''சீமா''** கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாது?

 ..............................................................................................................

4. குப்பைகளை முறையாக அகற்ற குப்பைத்தொட்டிகளில் குறிப்பிடப்பட்ட நிறங்கள் எவை?

 ..............................................................................................................

5. நண்பிகளும் என்ற சொல்லுக்குரிய ஆண்பால் சொல்லை எழுதுக. ..............................
6. காட்சியளிக்கின்றது எனும் சொல்லை **பிரித்தெழுதுக.** ........................................

02. ஒருமை உயர்திணை படர்க்கை சொல்லைத் தெரிவுசெய்து **அதன் கீழ் கோடிடுக.**

(1) மாணவர்கள் (2) வேடன் (3 நான்

03. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின் (✓)** எனவும் **பிழையாயின் (x)** எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

01. வாத்துக்கள் குளத்தில் சுதந்திரமாக நீந்திக் கொண்டிருந்தன. (  )

02. நானும் கமலனும் வைத்தியசாலையை நோக்கி நடந்தோம். (  )

03. பாடசாலை இடம்பெற்ற கலை விழாவில் மாணவர்களுக்கு பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது. (  )

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள எழுத்துப் பிழைகளை திருத்தி மீண்டும் **புள்ளிக் கோட்டில் எழுதுக.**

01. நகைச்சுவை பார்த்து வினுஜன் வகிறு குலுங்க சிரித்தான்.

..............................................................................................................

02. கத்திரிக்கோலினால் கடதாசித் துண்டுகள் வெட்டப்பட்டன.

..............................................................................................................


kalvi.lk

05. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் **கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

யமுனா / பயணத்தை / வழியில் / இராமபிரான் / நதியைக் / தொடர்ந்தபோது / கண்டார்

.......................................................................................................

.......................................................................................................

06. பொருத்தமான **நிறுத்தக் குறிகளை** இடுக.

| |
|---|
| பாதையில் ஒருவரைக் கண்ட அனிதா இவ்வீதியால் போகலாமா என்று கேட்டாள் |

07. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.

(1) இன்சொல் : ........................ (2) பெருமை : ....................................

08. கீழே தரப்பட்டுள்ள சொல்லில் உள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

01. நூலகம் - ........................................................................

02. பூக்கள் - ........................................................................

09. கீழேயுள்ள வினாக்களில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து **அதன் கீழ் கோடிடுக.**

01. எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் ......................... கொண்டாடப்படும்.
( பொன் விழா / பவள விழா )

02. மூங்கில் கன்று போல பனை .................. ஆகும்.
( வடலி / கன்று )

03. வாயூறுதல் என்பது ஆசைப்படுதல் போல தலை கவிழ்தல் ............................. ஆகும்.
( உயர்ச்சியடைதல் / வெட்கமடைதல் )

10. கீழே தரப்பட்டுள்ள கருத்துக்குப் பொருத்தமான தனிச் சொல்லை **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(1) கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி , பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு ..........................................


(2) இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை ..........................................

11. பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்துக்களை **தமிழ் சொற்களில்** எழுதுங்கள்

1. Spider .............................. 2. Beach ..........................

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





01 . ............................ 02. ..........................

13. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில சொற்களை ஒழுங்குப்படுத்தி **கருத்துள்ள வாக்கியம்** அமைக்கவும்.

01. classroom / to / Let's / the / go - ........................................................

02. you / grade / which / In / are - ........................................................


kalvi.lk

14. “ **ඔන** ” என்ற சொல்லுக்குரிய **தமிழ்ச்**சொல்லை எழுதுக.


…………………………………………………………………………………………………

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

அங்கே பாருங்கள் - …………………………………………………………………………

16. கீழே தரப்பட்டுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.

90070 - …………………………………………………………………………………...........

17. 


இந்த எண் சட்டகத்தில் நூறினிடத்தில் இருக்கும் ஆறு காய்களில் இருந்து இரண்டு காய்கள் ஆயிரத்தினிடத்துக்கு மாற்றப்பட்டால் கிடைக்கும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

……………………….

18. பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

9906, 66069, 6609, 9996 - ……………………………………………………………………

19. பாடசாலையொன்றில் 2000 மாணவர்களில் 937 பேர் வருடாந்த சுற்றுலாவில் பங்குபற்றினால் பங்குபற்றாத மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

……………………….

20. கீழே உள்ள எண்கோலத்தை கண்டறிந்து வெற்றிடத்தை நிரப்புக.

8, 16, ………. , 32, 40, ………

21. தொழிற்சாலையொன்றில் மூன்று நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட சவர்க்காரப் பெட்டிகளின் எண்ணிக்கை முறையே 2208, 1654, 3020 ஆகும். மூன்று நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த சவர்க்காரப் பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

………………………..


22. மு.ப 5.20 இற்கு புறப்பட்ட பேருந்து ஒன்று 3 மணித்தியாலமும் 45 நிமிடங்களில் பயணத்தை நிறைவு செய்து. பயணம் நிறைவு பெற்ற நேரத்தை இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் முறையில் எழுதுக.

........... **:** .............

23. 50kg அரிசி மூடையொன்றில் 25kg 375g விற்கப்பட்டது. மூடையில் மீதமாக இருக்கும் அரிசியின் அளவு யாது?

………….kg …………….g

24. கீழே தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி எத்தனை ஐந்தின் பங்கு ஆகும்?



………………………………………


kalvi.lk

25. பாடசாலையொன்றில் தரம் 5 மாணவர்களுக்காக ஒருவருக்கு 4 பேனை வீதம் வழங்குவதற்கு 820 பேனைகள் தேவை எனின் தரம் 5 இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

……………………….

26. ஓர் இலக்கத்தை 6 ஆல் வகுக்கும் போது வரும் விடை 132 எனின் அவ்விலக்கம் யாது?

……………………….


27. பிரதான வீதியிலிருந்து வீட்டிற்கு 32m தூரம் ஆகும். வீதியிலிருந்து வீட்டிற்கு நீரை பெற்றுக்கொள்வதற்காக 13m 95cm நீளம் மற்றும் 9m 5cm நீளமுடைய இரண்டு குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன. வீதியிலிருந்து வீட்டிற்கு நீரை பெற்றுக்கொள்ள எவ்வளவு நீளமுடைய குழாய் இன்னும் தேவைப்படுகிறது?

………….m …………….cm

28. மாம்பழமொன்றின் விலை ரூபாய் 16.00 அவ்வாறான 10 மாம்பழங்களை வாங்கியதற்கான செலவை நவீன் மற்றும் அவனுடைய நண்பர்கள் நால்வர் பகிர்ந்து கொண்டார்களாயின் ஒருவர் செலவு செய்த பணம் எவ்வளவு?

ரூபாய் …………………………….

29. வகுப்பறையொன்றில் 35 மாணவர்களிடம் ஒரு குறிப்பிட்ட வாரத்தில் வருகை விதம் கீழே உள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.




(1) வெள்ளிக்கிழமை வருகைத்தராத மாணவர்களின் எண்ணிக்கை 10 எனின் வருகைத்தந்த மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

(2) அதிகமானோர் சமூகமளிக்காத தினம் யாது? ……………………….

(3) சமமான எண்ணிக்கையில் சமூகமளித்த நாட்கள் எவை?

……………………….

(4) திங்கட்கிழமை வருகைத்தராத மாணவர்களின் எண்ணிக்கை யாது?

……………………….

- 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுச் செய்து **அதன் கீழ் கோடிடுக.**

30. எப்போதும் எம்மிடத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டிய நற்பழக்கமாக அமைவது,
    (1) கீழ் நிலை நடத்தைகள் (2) சமரசமான நடத்தைகள் (3) ஆக்கிரமிப்பு நடத்தைகள்


31. நற்பழக்கவழக்கங்கள் மற்றும் சட்டதிட்டங்களை கடைப்பிடிப்பதால் கிடைக்கும் நன்மை
    (1) பாராட்டப்படுதல் (2) தோல்வியடைதல் (3) கேலி செய்யப்படுதல்

32. பாம்பு தீண்டினால் முதலில் செய்ய வேண்டியது,
    (1) கடித்த பகுதியின் மேலே இறுக்கமாக கட்டுதல்.
    (2) மூலிகை பான வகையை அருந்த கொடுத்தல்.
    (3) கடித்த இடத்தை சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.

33. "கல்லும் மலையும் குதித்து வந்தேன்" எனும் பாடலை இயற்றியவர் யார்?
    (1) வி.என்.எஸ். உதயசந்திரன் (2) கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை
    (3) பராக்கிரமபாகு மன்னன்

34. தொற்றுநோய் ஒன்று தொற்றியுள்ளது என அறிந்த பின் பின்பற்ற வேண்டிய சிறந்த பழக்கமாக அமைவது,
    (1) சன நெரிசலான பொது இடங்களில் இருத்தல்.
    (2) முடிந்தளவு ஏனையோரை விட்டு விலகி இருத்தல்.
    (3) அன்றாட நடவடிக்கைகளை வழமைப்போல் மேற்கொள்ளல்.

35. படத்தில் காட்டப்பட்டுள்ள இரண்டு இலைகளும் எவை?



    (1) ஆமணக்கு, புளியம் இலை
    (2) பப்பாசி, கறிவேப்பிலை
    (3) பாகல் இலை, தொட்டாச்சிணுங்கி

36. சமூக விரோத செயற்பாடாக கருதப்படுவது,
    (1) சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல்.
    (2) பொது இடங்களை சுத்தமாக வைத்திருக்க உதவுதல்.
    (3) சிறுவர்கள் வீட்டுவேலைகளில் பெற்றோருக்கு உதவுதல்.

37. மின் அரைப்பான் மூலம் செய்யப்படும் பணிகளுக்காக ஆரம்பகாலத்தில் பாவிக்காத உபகரணத்தை உள்ளடக்கிய விடை தொகுதி,
    (1) உரல் மற்றும் உலக்கை
    (2) செக்கு மற்றும் எண்ணை ஆட்டும் கல்
    (3) அம்மி மற்றும் குளவி

38. தைப்பொங்கல் தினத்தில் இந்துக்களால் கௌரவிக்கப்படும் விலங்கு எது?
    (1) நாகம் (2) மயில் (3) பசு

39. அனைத்தும் உண்ணிகள் மட்டும் காணப்படும் விடை தொகுதி
    (1) மீன்கொத்தி, சேவல் , மயில் (2) கொக்கு, பன்றி, ஆடு (3) சேவல் , காகம் , பன்றி

40. இலங்கை நாட்டுகே உரித்தான தாவரம் அல்லாதது,
    (1) ஹீன்போவட்டியா (2) இறப்பர் (3) கொடபறை

41. இலையோரங்களில் மட்டும் முற்களை கொண்ட தாவரங்களை கொண்ட விடை தொகுதி
    (1) அன்னாசி, கள்ளி (2) தொட்டாச்சிணுங்கி, கள்ளி (3) கற்றாளை, அன்னாசி


kalvi.lk

42. பூக்கும் தாவரங்களினால் தாவரங்களுக்கு ஏற்படும் நன்மைகளில் ஒன்று,
(1) வாசனை ஏற்படுத்தல் (2) தம் இனத்தை பெருக்குதல் (3) சூழலை அழகுப்படுத்தல்


43. இரவில் பூக்கும் பூக்கள் அநேகமாக,
(1) அதிக வாசனையையும் பல்வேறு வர்ணங்களையும் கொண்டவை
(2) விலங்குகளை இரையாக்கி கொள்ளும் வடிவத்தை கொண்டவை
(3) அதிக வாசனையையும் வெள்ளை நிறத்தையும் கொண்டவை

44. தேசிய மட்டத்தில் கூட்டம் அல்லது விளையாட்டு போட்டிகளில் எமது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்துவதை அநேகமான நேரங்களில் நாம் அறிந்து கொள்ள முடிவது,
(1) அரச இலச்சினை மூலம்
(2) தேசிய கொடியின் மூலம்
(3) தேசிய உடையின் மூலம்

45. தேசிய கொடி மற்றும் தேசிய இலச்சினை ஆகிய இரண்டிலும் நாம் பொதுவாக காணக்கூடியது,
(1) வாளேந்திய சிங்கம் (2) சூரிய சந்திரன் (3) கலசம்

46. தொடர்பாடல் முறைகளில் மிகவும் வேகமான தொடர்பாடல் முறை,
(1) செய்தித்தாள் (2) போஸ்டர் (3) மின்னஞ்சல்

47. காற்று திசைக்காட்டியை கவனித்து காற்று வீசும் திசையை தெரிவு செய்க




(1) கிழக்கிலிருந்து மேற்கு திசை
(2) மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசை
(3) கிழக்கிலிருந்து வடக்கு திசை

48. பயணத்தை தொடங்குவதற்கு முன் பயணச்சீட்டு கட்டாயமாக தேவைப்படாத பொதுபோக்குவரத்து சாதனம் எது?
(1) புகையிரதம் (2) விமானம் (3) பேருந்து


49. துரித உணவு வகைகளை உண்பதன் மூலம் உடலுக்கு ஏற்படும் அதிக தீங்காக கருதப்படுவது,
(1) உடல் பருமன் அதிகரிப்பு
(2) உடல் வளர்ச்சி ஏற்படுதல்.
(3) நோய்களில் இருந்து பாதுகாக்கப்படல்.

50. அசுத்தமான நீரை பருகுவதால் ஏற்படும் நோய்களை மட்டும் கொண்ட விடை தொகுதி,
(1) மஞ்சட் காய்ச்சல் , கொலரா, செங்கண்மாரி
(2) யானைக்கால் , அம்மைநோய் , வயிற்றோட்டம்
(3) மஞ்சட் காய்ச்சல் , மலேரியா, வாந்திபேதி

51. விற்றமின் D குறைபாட்டினால் ஏற்படும் நோயின் அறிகுறிகள் எவை?
(1) தலைவலி, வாந்தி
(2) என்புறுக்கி , மூட்டு வலி
(3) வாய் ஓரங்களில் புண் , தோல் வெடிப்பு ஏற்படல்

52. மாணவர்கள் கட்டத்திற்கு கட்டம் ஒரு காலுடன் நகரச் செல்லும் விளையாட்டு,
(1) கீச்சு மாச்சுத் தம்பலம் (2) குலை குலையாய் முந்திரிக்காய் (3) எட்டுக்கோடு


kalvi.lk

53. 

தச்சு தொழிலின் போது இவ்வுபகரணம் பயன்படுத்தப்படுவது,

(1) பலகையில் துளையிடுவதற்கு

(2) பலகையில் சமாந்தரமான கோடுகளை வரைவதற்கு

(3) பலகையை சீவுவதற்கு

54. மருந்தை அருந்தும் போது அவதானிக்க வேண்டிய முக்கியமான காரணங்களில் ஒன்று,
(1) மருந்தை உட்கொள்ள வேண்டிய நாட்களின் எண்ணிக்கை
(2) மருந்தின் பெயர்
(3) எடுத்து கொள்ள வேண்டிய மருந்தின் அளவு

55. தாழ்வான நிலங்களை அகழ்வதால் ஏற்படும் இயற்கை அனர்த்தம் யாது?
(1) வெள்ளம் (2) மண்சரிவு (3) சுனாமி

56. மண் கழுவி கொண்டு செல்லல் ''மண்ணரிப்பு'' எனப்படும். மண்ணரிப்பு ஏற்பட காரணமாவது,
(1) புற்களை அகற்றுதல் (2) கல் அணைக்கட்டுதல் (3) மரங்களை நடுதல்

57. ''கலா வாவியினுடைய நீல நீர் எனது விலைமதிப்பற்ற பொக்கிஷம்'' எனக் கூறியவர்,
(1) தாதுசேனன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு

58. 3R இன் தொடர்பில்லாத கருத்து,
(1) மீளப்பயன்படுத்தல்
(2) மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்
(3) வாழ்நாள் பயன்பாட்டை அதிகரித்தல்

59. பயிர்கள் சேதமடைவதை தடுத்து கூடிய விளைச்சல் பெறும் காரணி அல்லாதது,
(1) குறிப்பிட்ட காலத்தில் பயிர்களை அறுவடை செய்தல்.
(2) அறுவடை செய்யப்பட்ட பயிர்களை பாதுகாப்பாக சேமித்து வைத்தல்.
(3) பசுமைக் கூடாரம் அமைத்து பயிர்களை பாதுகாத்தல்.

60. ஒரு நாள் பாடசாலை சென்று வீடு திரும்பும் போது வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. வீட்டை சுற்றும் முற்றும் பார்த்த போது வீட்டில் யாரையும் காணவில்லை. எனினும் வீட்டை திறக்கும் சாவி ஒன்று உங்களிடம் இருப்பது நினைவிற்கு வந்தது. இதன் பின்னர் நீங்கள் செய்தவற்றை பற்றி **மூன்று** வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகள் எழுத்துக் கூட்டல் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..........................................................................................

..........................................................................................

2. ..........................................................................................

..........................................................................................

3. ..........................................................................................

..........................................................................................

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

**ஆரம்பம் - 01.12.2024**

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

**கட்டண விபரங்கள்**

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page